Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2024**

INSERT **1 hour 30 minutes**

*5142353310-I*

**INFORMATION**
- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

NL 337078
© UCLES 2024
[Turn over

https://xtremepape.rs/

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–13** on the Question Paper.

லாவன்யாவுக்குச் சிறு வயதிலிருந்தே எங்கு சென்றாலும் திக்கு, திசை கண்டறிவது மிகவும் கடினமான செயலாக இருந்தது. அவள் சிறு வயதாக இருக்கும்போது பாடசாலையில் பல தடவைகள் தனது வகுப்பறை எது என்று தெரியாமல் தடுமாறுவது உண்டு. அப்பொழுதெல்லாம் வகுப்பு ஆசிரியர் அவளை உரிய வகுப்பிற்கு அழைத்துச் சென்ற சந்தர்ப்பங்கள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.

சற்று வளர்ந்த பின்னர், அவளது தாயார் அவளுக்கு திக்கு, திசைகள் தொடர்பாக மன உறுதியை ஏற்படுத்துவதற்காகப் பாதுகாப்பான அங்காடிகளுக்கு அழைத்துச் செல்வார். அங்கு அவளைத் தனியாகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காகக் கடைகளுக்குச் சென்று அவளுக்கு விரும்பிய ஏதேனும் பொருட்களை வாங்கி வரும்படி சிறிய தொகைப் பணத்தைக் கொடுத்து அனுப்புவார். அவளுக்குத் தன்னம்பிக்கையும் ஊக்கமும் கொடுப்பதற்காக, லாவன்யா திரும்பி வரும்வரை தாயார் அந்த அங்காடிக்குள் உள்ள ஏதேனும் ஒரு உணவு விடுதிக்குள் தேனீர் அருந்தியபடி லாவன்யாவுக்காகக் காத்திருப்பார். ஆரம்பத்தில் பல தடவைகள் லாவன்யா அங்காடிக்குள் திக்கு, திசை அறியாமல் தடுமாற்றத்துடனும் பயத்துடனும் தாயாரைக் கைத்தொலைபேசியில் உதவிக்கு அழைப்பாள்.

லாவன்யாவுக்குப் பதின்ம வயதாக இருக்கும்போது, அவளது தகப்பனாருக்கு வேலையில் இடமாற்றம் ஏற்பட்டு, அவளது குடும்பம் வேறு ஊருக்கு இடம் மாறிப் போகவேண்டிய தேவை ஏற்பட்டது. சமையல் பாத்திரங்கள் அனைத்தும் பழைய வீட்டிலிருந்து புதிய வீட்டிற்கு வருவதற்காகப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், அனைத்துப் பொருட்களும் புதிய வீட்டில் இடம்மாறி இருந்தமையினாலும் வீடு மாறிய உடல் அசதியாலும் லாவன்யாவின் தாயாருக்குப் புதிய வீட்டுக்குச் சென்ற தினத்தில் சமையல் செய்வதில் சிரமங்கள் இருந்தன. அதனால், லாவன்யாவிடம் அருகில் உள்ள உணவு விடுதியில் உணவு வாங்கி வரும்படி அனுப்ப எண்ணினாள். அவள் புறப்படுதற்கு முன்னர், அவளது தாயார் அந்த உணவு விடுதியுள்ள இடத்தை விரிவாக லாவன்யாவுக்கு விளக்கி, உணவு விடுதியை அடைவதற்கு எந்தவொரு வீதியையும் கடக்கத் தேவையில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

லாவன்யாவிற்குக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி அவள் வீட்டிலிருந்து புறப்பட்டு, எதிர்வந்த சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்து இடது புறமாகத் திரும்பிப் பத்து நிமிடங்கள் நடக்க வேண்டும். மீண்டும் இடது புறமாகத் திரும்பியதும் உணவு விடுதி எங்கு என்று தேடத் தொடங்கினாள். அவளால் அந்த உணவு விடுதியை எங்கும் காண முடியவில்லை. ஒவ்வொரு கடையாகப் பெயர்களைப் பார்த்து மீண்டும் ஒருமுறை உணவு விடுதி அங்கு உள்ளதா என்று சரிபார்த்துக் கொண்டாள். எதிர்த் திசையில் அந்த உணவு விடுதி உள்ளதா என்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள். அங்கும் அதனை அவளால்



https://xtremepape.rs/

காண முடியவில்லை. இறுதியாக, வீதியின் பெயர் சரியானதா எனவும் சரிபார்த்துக் கொண்டாள்.

மீண்டும் வீட்டிற்குச் செல்லும் வழியில் உணவு விடுதியைக் கண்டு பிடிக்க முடியாமல் போனதற்குத் தாயார் தன்னைத் திட்டக்கூடும் அல்லது கேலி செய்யக்கூடும் என்று அவள் பயந்தாள். நடந்ததை வீட்டில் கூறியபோது, அவளது தந்தையார் தானும் அவளுடன் வந்து அந்த இடத்தைக் காட்டுவதாகக் கூறினார். இருவருமாக நடந்து சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அடைந்தவுடன், அதன் பின்னால் உள்ள ஒரு சிறிய பாதை வழியாக அவளது தந்தை நடக்கத் தொடங்கினார். அப்போதுதான் லாவன்யாவுக்குத் தான் அந்தச் சிறிய பாதையைக் கவனிக்காமல் அதைக் கடந்து சென்றது தவறு என்று புரிந்தது.

© UCLES 2024


https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/